# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை** : திரு. **மகேசன் காசிராஜன்,** இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
******

**ஆணை எண்: 195 /பேரூ/2024**
**நாள் : 10.06.2025**

R. சரோஜா,
த/பெ. ராமச்சந்திரன்,
காரிமங்கலம் ,
தருமபுரி மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
காரிமங்கலம் தேர்வுநிலை பேரூராட்சி,
தருமபுரி மாவட்டம். – எதிர் மனுதாரர்

தருமபுரி மாவட்டம், காரிமங்கலம் வட்டம், 11/22, பாலகோடு மெயின்ரோடு என்ற முகவரியை சேர்ந்த R. சரோஜா, த/பெ. ராமச்சந்திரன் என்பவரின் 04.09.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 05.09.2024 அன்று பெறப்பட்டு, 195/பேரூ/2024 என எண்ணிடப்பட்டு முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

தருமபுரி மாவட்டம், காரிமங்கலம் வட்டம், 11/22, பாலகோடு மெயின்ரோடு என்ற முகவரியை சேர்ந்த R. சரோஜா, த/பெ. ராமச்சந்திரன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள புகார் மனுவில் கீழ்க்கண்டவாறு புகார்களை தெரிவித்துள்ளார்:

“தருமபுரி மாவட்டம், காரிமங்கலம் வட்டம், காரிமங்கலம் டவுன் மற்றும் பேரூராட்சிக்கு உட்பட்ட 11/21, பாலக்கோடு மெயின் ரோடு (மேல் தெரு) 19.02.2024 அன்று மாதப்பன் குடும்பத்தினர் வீட்டை இடித்து அதன் மூலம் கழிவுநீர் வடிகால் அடைக்கப்பட்டுள்ளது. இதைபற்றி நான் சம்பந்தப்பட்ட ஊழியர்களிடம் தெரிவிக்கும்போது அவர்கள் இதைப்பற்றி கண்டு கொள்வதில்லை. பிறகு நான் 08.04.2024 அன்று காரிமங்கலம் பேரூராட்சிக்கு மனு செய்தேன். இந்த நாள் வரை எந்த பதிலும் அளிக்கவில்லை மற்றும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. நான் 10.05.2024 அன்று முதலமைச்சர் தனிப்பிரிவுக்கு மனு செய்தேன். எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. நான் 21.05.2024 அன்று பேரூராட்சிகளின் உதவி இயக்குநருக்கு

(தருமபுரி மாவட்டம்) மனு செய்தேன். பதில் மட்டும் வழங்கப்பட்டது மற்றும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை மற்றும் நான் 26.07.2024 அன்று நினைவூட்டல் கடிதம் பேரூராட்சிகளின் உதவி இயக்குநருக்கு (தருமபுரி மாவட்டம்) மனு செய்தேன். பதில் மட்டும் வழங்கப்பட்டது மற்றும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இதில் 40 அடி நீளம் 3 அடி அகலமும் கொண்ட முழுமையாக மண் கொட்டப்பட்டு கழிவுநீர் வடிகால் அடைக்கப்பட்டுள்ளது. இது 190 நாட்களுக்கு மேலாக கழிவுநீர் வடிகால் அடைக்கப்பட்டது மற்றும் தூர்வாரப்படாமல் இருக்கிறது. இதனால் கழிவுநீர் வடிகால் முழுவதும் நிரம்பி உள்ளது மற்றும் மழை பெய்யும் பொழுது மழை நீருடன் கழிவுநீரும் கலந்து வீட்டுக்குள் வருகிறது. இதனை நாங்கள் வாளிகள் மூலம் அகற்ற வேண்டிய அவல நிலை உள்ளது. இதன் காரணமாக பாம்பு, டெங்கு நோய் பரவும் அபாயம் மற்றும் விஷவாயு தாக்கும் அபாயம் உள்ளது. எனவே கழிவுநீர் வடிகால் அடைப்பை நீக்கி மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரி மற்றும் வீட்டு உரிமையாளர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

காரிமங்கலம் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் செய்யும் கொடுமைகளின் விவரங்கள்:

1. உயர் அதிகாரிகள், தபால் மூலம் அறிவுறுத்தியும், எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை.
2. நான், முதலமைச்சர் தனிப்பிரிவுக்கு மனு செய்த நாளிலிருந்து என் வீட்டின் பின்புறம் குப்பைகள் கொட்டப்படுகிறது மற்றும் குப்பை பைகள் வைக்கப்படுகிறது.
3. தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் ஏதேனும் மனு செய்தால் அதற்கு பதில் அளிப்பதில்லை.
4. நேரில் சென்று வலியுறுத்தினால் பொதுமக்களுக்கு மரியாதை அளிப்பதில்லை.

காணொளி காட்சி மூலம் விசாரணைக்கு ஆஜராக அனுமதி அளிக்குமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 28.10.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் காரிமங்கலம் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

3. காரிமங்கலம் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 22.11.2024 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

காரிமங்கலம் பேரூராட்சிக்குட்பட்ட 8-வது வார்டு மேல் தெரு பாலக்கோடு மெயின்ரோடு பகுதியில் மாதப்பன் என்பவரது குடும்பத்தினர் வீட்டை இடித்து இதன் மூலம் கழிவுநீர் வடிகால் அடைக்கப்பட்டுள்ளதாக திருமதி. ஆர். சரோஜா த/பெ ராமச்சந்திரன் என்பவர் 18.10.2024 மற்றும் 21.05.2024 நாளிட்ட விண்ணப்பத்தில் தெரிவித்துள்ளார்.

மேற்படி கால்வாய் மீது உள்ள மண்ணை அகற்றுமாறு தெரிவித்து திரு. மாதப்பன் என்பவரின் மகன்களான 1. திரு. கே.எம். பொன்னுசாமி (எ) சங்கர், (எ) கே.எம். பொன்னியின் செல்வன், 2. திரு. கே.எம். கிருஷ்ணன் ஆகியோருக்கு பேரூராட்சி அலுவலக 30.04.2024, 30.05.2024, 03.07.2024, 01.08.2024 மற்றும் 10.10.2024 நாளிட்ட கடிதங்கள் மூலம் அறிவிப்புகள்

அளிக்கப்பட்டுள்ளன. மேற்படி மாதப்பன் என்பவரின் மகன்கள் தங்கள் பழைய வீட்டை இடித்து புதியதாக வீடு கட்டுவதால் வீட்டிற்கு முன்புறமுள்ள கால்வாயில் அடைப்பு ஏற்படாதவாறு 5” அளவு கொண்ட பிவிசி பைப் அமைத்து கழிவுநீர் செல்வதற்கு வழி செய்து மேலே பலகைகளை அடுக்கி மண்ணை கொட்டியுள்ளதாகவும், கட்டடத்திற்கு அமைக்கப்பட்டுள்ள முட்டினை அகற்றியவுடன் கால்வாய் மீதுள்ள மண்ணை அப்புறப்படுத்தி சுத்தம் செய்து தருவதாகவும் திரு. கே.எம். பொன்னுசாமி (எ) பொன்னியின் செல்வன் மற்றும் திரு. கே.எம். கிருஷ்ணன் ஆகியோர் 14.10.2024 நாளிட்ட தங்களது விண்ணப்பத்தில் தெரிவித்துள்ளார்கள்.

மேலும் இக்கால்வாயானது 1 ½ அடி ஆழம் மட்டுமே உள்ள சிறிய கால்வாய் ஆகும். இதில் தண்ணீர் தேங்கி நின்று தான் செல்கிறது. 20.11.2024 ஆம் தேதி மாதப்பன் குடும்பத்தினர் வடிகால் மீதிருந்த மண்ணை அப்புறப்படுத்தினர். பேரூராட்சி தூய்மைப் பணியாளர்களை கொண்டு வடிகால் சுத்தம் செய்யப்பட்டு கழிவுநீர் சீராக வெளியேறுகிறது என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் பேரூராட்சி தூய்மை பணியாளர்கள் அவ்வப்போது கழிவுநீர் கால்வாய்களை சுத்தம் செய்து வந்த நிலையில் மேற்கண்ட புகார் குறித்து விசாரித்தபோது ஏற்கனவே திருமதி. ஆர். சரோஜா என்பவரது குடும்பத்திற்கும், திரு. மாதப்பன் குடும்பத்திற்கும் சொத்து சம்பந்தமான பிரச்சினை இருப்பதாகவும், இருவரது குடும்ப பிரச்சினையில் வழக்கு நிலுவையில் உள்ளதாக தெரிய வருகிறது என்பதையும் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான காரிமங்கலம் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோரை 24.03.2025 அன்று இம்முறைமன்ற நடுவ அலுவலகத்தில் நடைபெறவிருக்கும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 18.03.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் R. சரோஜா, த/பெ. ராமச்சந்திரன் என்பவர் தனக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் அவரது சார்பாக ஒருவர் அல்லது காணொளி காட்சியின் மூலம் விசாரணை செய்யவும் விசாரணைக்கு வேறொரு நாளில் மாற்றி வைக்குமாறு இம்முறைமன்ற நடுவத்தை 21.03.2025 நாளிட்ட மின்னஞ்சலில் (மின்னஞ்சல் முகவரி navakrishnan561@gmail.com) கேட்டுக்கொண்டார். அதன்படி 24.03.2025 அன்று நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் ஆஜராகவில்லை.

6. எதிர்மனுதாரரான காரிமங்கலம் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் திருமதி. அ. ஆயிஷா என்பவர் 24.03.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

- “மனுதாரர் புகாராக தெரிவிக்கும், பாலகோடு மெயின் ரோடு (மேல் தெரு) எண்.11/21 என்ற முகவரியில் வசிக்கும் திரு. மாதப்பன் குடும்பத்தினரால் கழிவு நீர் கால்வாயை அடைத்துள்ளதை குறித்து, சுத்தம் செய்யக் கோரி திரு. மாதப்பன் குடும்பத்தினருக்கு உரிய அறிவிப்புகள் பேரூராட்சியால் வழங்கப்பட்டன.

- இதனை தொடர்ந்து திரு. மாதப்பன் குடும்பத்தினர் புதிய வீடு கட்டி வருவதால் வடிகாலில் கொட்டப்பட்டிருந்த மண்ணை 20.11.2024 அன்று அகற்றி கழிவு நீர்

தேங்காத வண்ணம், வடிகால் மீது பலகைகள் அடுக்கி, அதன் மீது எம். சாண்ட் கொட்டப்பட்டுள்ளது. பொதுமக்களுக்கு எவ்வித இடையூறின்றி கட்டடம் முன்பக்கம் உள்ள எம். சாண்டினை, கட்டடம் கட்டி முடித்தவுடன் உடனடியாக அகற்றி விடுவதாக கட்டட உரிமையாளர் உறுதி அளித்துள்ளார். இவ்வாறு மனுதாரரின் வீட்டிற்கு முன்புறமுள்ள கால்வாயில் அடைப்பு ஏற்படாதவாறு கழிவு நீர் செல்வதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

➢ மேலும் பேரூராட்சி தூய்மைப் பணியாளர்களால் மேற்படி வடிகால் சுழற்சி முறையில் சுத்தம் செய்யப்பட்டு வருகிறது. இதனால் கழிவு நீர் எவ்வித தங்கு தடையின்றி சீராக வெளியேறுகிறது. இதற்கு ஆதாரமாக புகைப்படங்கள் சமர்ப்பிக்கிறேன்.

எனவே, மேற்கண்ட வடிகால் சுத்தம் செய்யப்பட்டு, கழிவு நீர் சீராக வெளியேறுவதால், மனுதாரர் உட்பட பொதுமக்களுக்கும் எவ்வித சுகாதார சீர்கேடு ஏற்படாதவண்ணம் தொடர்ந்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை இம்முறை மன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன் எனத் தெரிவித்துள்ளார்.

7. மனுதாரர் R. சரோஜா, த/பெ. ராமச்சந்திரன் என்பவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க, மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான காரிமங்கலம் தேர்வு நிலை பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோரை 15.04.2025 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெறவுள்ள விசாரணைக்கு ஆஜராகுமாறு 27.03.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

8. மனுதாரர் தனது 14.04.2025 நாளிட்ட மின்னஞ்சலில் (மின்னஞ்சல் முகவரி navakrishnan561@gmail.com-ல் இருந்து அனுப்பப்பட்டது). தனது தாய்மாமா இறந்த காரணத்தினால் அவர் சார்பாக ஒருவர் அல்லது காணொளி காட்சியின் மூலம் விசாரணை செய்யவும் விசாரணையை வேறு ஒரு நாளுக்கு மாற்றியமைக்குமாறும் கேட்டுக்கொண்டார். அதன்படி மனுதாரரும் மேற்படி விசாரணையில் ஆஜராகவில்லை.

9. எதிர்மனுதாரரான காரிமங்கலம் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் திருமதி. அ. ஆயிஷா என்பவர் 15.04.2025 அன்று நடைபெற்ற விசாணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமுலத்தை சமர்ப்பித்துள்ளார்.

➢ "மனுதாரர் புகாராக தெரிவிக்கும், பாலக்கோடு மெயின் ரோடு (மேல் தெரு), எண்.11/21 என்ற முகவரியில் வசிக்கும் திரு. மாதப்பன் குடும்பத்தினரால் கழிவு நீர் கால்வாயை அடைத்துள்ளதை குறித்து, சுத்தம் செய்யக் கோரி திரு. மாதப்பன் குடும்பத்தினருக்கு உரிய அறிவிப்புகள் பேரூராட்சியால் வழங்கப்பட்டன.

➢ இதனை தொடர்ந்து, திரு. மாதப்பன் குடும்பத்தினர் புதிய வீடு கட்டி வருவதால் வடிகாலில் கொட்டப்பட்டிருந்த மண்ணை 20.11.2024 அன்று அகற்றி கழிவு நீர் தேங்காத வண்ணம், வடிகால் மீது பலகைகள் அடுக்கி, அதன் மீது எம். சாண்ட் கொட்டப்பட்டுள்ளது. பொதுமக்களுக்கு எவ்வித இடையூறின்றி கட்டடம் முன்பக்கம் உள்ள எம். சாண்டினை கட்டடம் கட்டி முடித்தவுடன் உடனடியாக அகற்றி விடுவதாக கட்டட உரிமையாளர் உறுதி அளித்து, கால்வாய் அடைப்பு

ஏற்படாதவாறு சுத்தம் செய்துள்ளார். ஆனால் கட்டட உரிமையாளர் எம். சாண்ட் மண்ணினை மனுதாரர் வீட்டிற்கு முன்புறமுள்ள கழிவுநீர் வடிகாலில் தொடர்ந்து கொட்டி வருகிறார்.

➢ எனவே மேற்படி கட்டட கழிவுகளை வடிகால் கால்வாயிலிருந்து உடனடியாக அகற்றிட உரிய அறிவிப்பினை கட்டட உரிமையாளருக்கு சார்பு செய்யப்பட்டு, ஒருவார காலத்திற்குள் எவ்வித புகாருக்கும் இடம் அளிக்காமல், கழிவுநீர் வடிகால் சுத்தம் செய்யப்பட்டு புகைப்படத்துடன் கூடிய உரிய அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பிக்கிறேன் என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.''

10. எதிர்மனுதாரரான காரிமங்கலம் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 21.05.2025 நாளிட்ட அறிக்கையில், கழிவு நீர் கால்வாயின் மீது கொட்டப்பட்டிருந்த எம். சாண்ட், செங்கல் அனைத்தும் அகற்றம் செய்து, கழிவு நீர் கால்வாய் சுத்தம் செய்யப்பட்டுள்ளது என தெரிவித்து அதற்கான புகைப்படங்களை சமர்ப்பித்துள்ளார்.

11. மனுதாரரின் புகார் மனு, எதிர்மனுதாரரான காரிமங்கலம் தேர்வு நிலை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கைகள் மற்றும் அவரது வாக்குமூலங்கள் ஆகியவை உரிய ஆவணங்களுடன் பரிசீலிக்கப்பட்டது.

தருமபுரி மாவட்டம், காரிமங்கலம் என்ற இடத்தை சார்ந்த மனுதாரர் R. சரோஜா, த/பெ. ராமச்சந்திரன் என்பவர் தனது 04.09.2024 நாளிட்ட முறையீட்டு மனுவில் காரிமங்கலம் தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட 11/21, பாலக்கோடு மெயின் ரோட்டில் அமையப்பெற்ற இடத்தில் திரு. மாதப்பன் குடும்பத்தினர் 19.02.2024 அன்று வீட்டை இடித்தது மூலம் கழிவுநீர் வடிகால் அடைக்கப்பட்டுள்ளது என்றும், கழிவுநீர் வடிகால் அடைப்பு ஏற்பட்டு சுகாதார சீர்கேடு ஏற்பட்டு உள்ளதாக புகார் தெரிவித்துள்ளார்.

மனுதாரர் தனது பக்கத்து வீட்டின் உரிமையாளரான திரு. மாதப்பன் குடும்பத்தினர் வீட்டை இடித்து கட்டட கழிவுகள் கழிவுநீர் கால்வாயில் கொட்டுவதாக 08.04.2024 அன்று காரிமங்கலம் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலருக்கு மனு அளித்து, அதனை தொடர்ந்து பேரூராட்சியால் 5 அறிவிப்புகள் மூலம் கட்டட கழிவுகள் அகற்றக் கோரி சம்பந்தப்பட்ட கட்டட உரிமையாளருக்கு அறிவிப்புகள் அளித்தும், கழிவு நீர் கால்வாயில் உள்ள ஆக்கிரமிப்பை முழுவதுமாக அகற்றாமல், எம்.சாண்ட் மற்றும் செங்கல் ஆகியவை கால்வாயின் மீது ஆக்கிரமிப்பு செய்து வைத்துள்ளனர். இறுதியாக பேரூராட்சி செயல் அலுவலரின் 21.05.2025 நாளிட்ட அறிக்கையின் வாயிலாக கழிவுநீர் கால்வாயில் கட்டட கழிவுகள் அனைத்தும் அகற்றப்பட்டுள்ளது என்கிற விபரத்தை புகைப்படங்களுடன் சமர்ப்பித்துள்ளதன் மூலம், மனுதாரர் கழிவுநீர் கால்வாயில் உள்ள கட்டட கழிவுகள் அகற்றக்கோரி கடந்த 08.04.2024 அன்று புகார் மனு அளித்ததற்கு ஓர்ஆண்டுக்கு பிறகு ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டுள்ளது. இவ்வாறு பொது சுகாதாரத்திற்கு கேடு விளைவிக்கும் கழிவுநீர் கால்வாயில் ஆக்கிரமிப்பை அகற்ற மிகவும் காலதாமதமாக நடவடிக்கை எடுத்த பேரூராட்சி செயல் அலுவலரின் நடவடிக்கையை இம்முறைமன்ற நடுவம் வன்மையாகக் கண்டிக்கிறது.

இனி வருங்காலங்களில், இது போன்ற புகார்கள் பொது மக்களிடமிருந்து வரப்பெற்றதும், உடனுக்குடன் நடவடிக்கை எடுத்து, எவ்வித சுகாதார சீர்கேட்டிற்கும் ஊறு விளைவிக்காமல் பொதுமக்களின் நலத்தினை கருத்தில்கொண்டு துரித நடவடிக்கை மேற்கொள்ளுமாறு

காரிமங்கலம் தேர்வு நிலை பேரூராட்சி செயல் அலுவலரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2025ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 10-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சிஅமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. R. சரோஜா,
   த/பெ. ராமச்சந்திரன்,
   எண். 11/22, பாலகோடு மெயின் ரோடு,
   காரிமங்கலம் வட்டம்,
   தருமபுரி மாவட்டம் – 635 111.

2. செயல் அலுவலர்,
   காரிமங்கலம் தேர்வுநிலை பேரூராட்சி,
   தருமபுரி மாவட்டம்.

3. பேரூராட்சிகளின் ஆணையர்,
   பேரூராட்சிகளின் ஆணையரகம்,
   இராஜா அண்ணாமலைபுரம்,
   எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

4. இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer).
   (பெயரிட்ட உறையில்)
   பேரூராட்சிகளின் ஆணையரகம்,
   இராஜா அண்ணாமலைபுரம்,
   எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

<u>நகல்</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்
இருப்புக்கோப்பு/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

13/6/25
செயலாளர்
13/6/25